# அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்

## <u>அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் (PL 1) பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பங்கள் கோரல் - 2026</u>

**1.0** **அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**2.0** **அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலைத் தேர்ச்சியற்ற சேவைப் பிரிவில் உள்ள பதவிகளுக்கான தற்போதைய வெற்றிடங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| **பணி உதவியாளர்** | **10** |

**3.0** **சம்பள அளவுத்திட்டம்:**

**3.1 சம்பளக் குறியீடு** - PL 1-2025

**3.2 சம்பள அளவுத்திட்டம்** - ரூ. 40,000/- - 10 x 450 - 10 x 490 - 10 x 540 - 12 x 590 = ரூ. 61,880/-

**குறிப்பு -** I) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் அட்டவணை III இன்படி 01.01.2027 வரை சம்பளம் வழங்கப்படும்; 01.01.2027 முதல் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

II) இதற்கு மேலதிகமாக, அரசாங்கம் அவ்வப்போது அரச அலுவலர்களுக்கு வழங்கும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் நீங்கள் உரித்துடையவராவீர்கள்.

**3.3 சம்பள முறைமை:**

| தரம் | ஆரம்பச் சம்பளப் படிநிலை | ஆரம்பச் சம்பளத் தொகை (ரூ.) |
|---|---|---|
| III | படிநிலை 01 | ரூ. 40,000/- |
| II | படிநிலை 12 | ரூ. 44,990/- |
| I | படிநிலை 22 | ரூ. 49,940/- |
| விசேட | படிநிலை 32 | ரூ. 55,390/- |

**4.0 பதவியின் / பதவிகளின் தன்மை** : நிரந்தரமானதும் ஒய்வூதிய உரித்துடையதும்

**5.0 ஆட்சேர்ப்புத் தரம்** : தரம் III

**6.0 மொழி மூலம்** : சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

**7.0 ஒப்படைக்கப்படும் கடமைகள்:**

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | கடமைகள் |
|---|---|
| பணி உதவியாளர் | சேவை நிலையத்தைச் சுத்தம் செய்தல், பொருட்களைக் கொண்டு செல்ல உதவுதல், தொழில்நுட்ப பணியாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைப் பணிகளில் உதவுதல், மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல். |

**8.0 இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலத்தை நீடிப்பதற்கோ நியமனத்தை முடிவுறுத்துவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.**

**9.0 தகைமைகள்:**

**I). கல்வித் தகைமைகள்:**
க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**II). தொழிற் தகைமைகள்** : ஏற்புடையதல்ல.

**III). அனுபவம்** : ஏற்புடையதல்ல.

**IV). உடல் தகுதி:** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

**V). ஏனைய தேவைகள்**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான 09 முதல் 10 வரையிலான தகைமைகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள **06.11.2026** ஆம் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**10.0 வயது** : விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**11.0 ஆட்சேர்ப்பு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கின்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**11.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| பிரதான தலைப்புகள் | அதிக பட்சம் | புள்ளியிடும் முறை | புள்ளிகள் |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 30 | க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பொதுச் சாதாரணப் பரீட்சையைத் தவிர்த்து, சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் நான்கு (04) புள்ளிகள் | 12 |
| | | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்ற ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை | 08 |
| | | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரையிலான சான்றிதழ் பாடநெறி | 06 |
| | | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரையிலான சான்றிதழ் பாடநெறி | 04 |
| தொழிற் தகைமைகள் / பயிற்சி நெறிகள் | 25 | NVQ மட்டம் 2 தகைமை | 05 |
| | | NVQ மட்டம் 3 தகைமை | 08 |
| | | NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை | 12 |
| சேவை அனுபவம் | 30 | அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் பொருத்துதல், பற்றவைப்பு, இயந்திரப்பணி, வார்ப்பு, தச்சுப்பணி அல்லது ஏனைய இயந்திரப் பொறியியல் துறைகளில் பெற்ற ஒவ்வொரு வருட சேவை அனுபவத்திற்கும் ஐந்து (05) புள்ளிகள் | 30 |
| இணைப்பாட விதானச் செயற்பாடுகள் | 10 | விளையாட்டுச் சான்றிதழ்களுக்கு: மாகாண மட்ட வெற்றிகளுக்கு மூன்று (03) புள்ளிகளும் அகில இலங்கை மட்ட வெற்றிகளுக்கு ஐந்து (05) புள்ளிகளும் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெற்றிகளுக்கு); பாடசாலை மாணவர் தலைவர் பதவிக்கு இரண்டு (02) புள்ளிகளும் வழங்கப்படும் | 10 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | 05 | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும் | 05 |
| **மொத்தம்** | | | **100** |

**குறிப்பு -** பதவிக்குரிய அனுபவம் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.



SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**12.0** அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பதாரர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருக்கக் கூடாது.

**13.0** விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் எந்த நிலையிலும் அவரது விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் வழங்கிய தகவல் எப்போதாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**14.0** விண்ணப்பம் குறித்த மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும். அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துவராத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**15.0** விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் அல்லது அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**16.0** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கருத்தின் அடிப்படையில், குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும், அவ்வாறு அழைக்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அறிவித்தலுக்கமைய தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் அவர்களின் விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படும்.

**17.0** விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்த கீழ்காணும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்:

I. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்
III. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

**18.0** இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுகுறித்து பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய செயற்படக் கட்டுப்பட்டுள்ளனர்.



SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**19.0 விண்ணப்பிக்கும் முறை:**

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் **06.11.2026** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **"பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலொன்னாவ வீதி, கொலொன்னாவ"** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது மேல் மூலையில் **"ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் தரம் III இற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2026"** எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பொறி. எஸ். என். பி. எம். பத்மசிறி
பணிப்பாளர் நாயகம்

09 ஒக்டோபர் 2026
அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,
கொலொன்னாவ வீதி,
கொலொன்னாவ.



SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED